Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 பங்குனி 3 ஞாயிற்றுக்கிழமை (16-03-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 109

## எதிர்வரும் வெள்ளிக்கிழமை

# வாக்களிப்பு முடிவடைந்த கையோடு ஊரடங்கை அமுல் செய்ய முடிவு!

## குழப்பங்கள் மூளலாம் என்று புலனாய்வுத் துறை தகவல்

கொழும்பு, மார்ச் 16

தென்னிலங்கையில் உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறவுள்ள எதிர்வரும் வெள்ளிக்கிழமை 21 ஆம் திகதியன்று, வாக்களிப்பு முடிந்த கையோடு, 'நாடு முழுவதிலும் ஊரடங்குச் சட்டத்தை அமுல் செய்ய அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக. அறியவந்துள்ளது.

தேர்தல் நாளில் குழப்பங்கள் மூளும் சாத்தியம் பெருமளவில் உண்டு என்று கிடைத்துள்ள புலனாய்வுத் தகவல்களையடுத்தே அரசாங்கம் இந்த முடிவை மேற்கொண்டிருப்பதாக பாதுகாப்பு உயர் வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை—

தேர்தல் கலவரங்கள் கடைசியில் தமிழர்கள்மீதான தாக்குதல்களாக மாறிவிடக் கூடும் என்ற அச்சம் கொழும்பு வாழ் தமிழர் வட்டாரங்களில் நிலவுகிறது.

எனினும் தேர்தலுக்குப் பிந்திய கலவரங்களைத் தடுப்பதில் பாதுகாப்புத்துறை தீவிரமாகச் செயற்படும் என்றும் அதற்கான முன்னேற்பாட்டுத் திட்டங்கள் வகுக்கப்பட்டிருப்பதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வரை ஆயிரத்து 290 தேர்தல் வன்செயல்கள் இடம் பெற்றதாக முறைப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### குறுகிய கால உத்தரவில்

## 3 மணித்தியாலங்கள் நீடித்த 'திரிவிடசரய'

கொழும்பு, மார்ச் 16

கடந்த வியாழக்கிழமை முல்லைத்தீவுப் பகுதியில் படையினர் மேற்கொண்ட 'திரிவிடசரய' இராணுவ நடவடிக்கை மூன்று மணித்தியாலங்கள் நீடித்ததாக 'த ஐலண்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

குறுகிய கால உத்தரவின் பேரில் மேற்கொள்ளப்பட்ட இந்த இராணுவ நடவடிக்கையின் போது இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்குள் தரைப்படையினர் செல்லவில்லை என்றும் —

கடற்படையும், விமானப்படையும் மட்டுமே இந்த நடவடிக்கையில் பங்குபற்றின என்றும் — தெரிவிக்கப்பட்டது. (இ-3-150)

## அகதி முகாமில் படையினர் தேடுதல்

திருகோணமலை, மார்ச் 16

தமிழகத்துக்கு அகதிகளாகச் சென்று திரும்பியோர் தங்கியுள்ள திருமலை 4 ஆம் கட்டை அகதி முகாமில் இராணுவத்தினர் நடத்திய தேடுதலில் 5 தமிழர்கள் கைது செய்யப்பட்டனர்.

எனினும் விசாரணையின் பின்னர் அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

மீளக் குடியேற படையினர் அனுமதிக்காத பகுதிகளைச் சேர்ந்தவர்களே இந்த முகாமில் உள்ளனர்.

அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் இந்த முகாமைப் பராமரித்து வருவது குறிப்பிடத்தக்கது. (இ-3-150)

### முச்சந்தி முரளி



அப்ப திடீர் தோசைமாதிரி இதுவும் ஒண்டு போல...!

## மருதங்கேணி பஸ் குண்டு வெடிப்பில் மக்கள் இருவர் பலி; 11 பேர் காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 16

மருதங்கேணியில் நேற்று இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில், பயணிகள் பஸ்ஸில் பயணம் செய்தவர்களில் மூவர் உயிரிழந்தனர்.

இந்த மூவரில் ஒருவர்படையினர் என்று அந்த பஸ்ஸில் வந்தவர்களால் தெரிவிக்கப்பட்டது.

பஸ்ஸில் இருந்தவர்களில் பதினொரு பேர் இச்சம்பவத்தின்போது படுகாயமடைந்தனர். பஸ்ஸும் சேதமடைந்தது. காயமடைந்தோரில் சாரதி, நடத்துனர் ஆகியோரும் அடங்குவர்.

மருதங்கேணியில் நேற்றுக் காலை 6-30 மணிக்கு இச்சம்பவம் இடம்பெற்றதாக அறியவந்தது.

தாளையடியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி சுமார் 15 பயணிகளுடன் காலை 6-15 மணிக்குப் புறப்பட்ட இந்த வடபிராந்தியப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ், மருதங்கேணிப் பாலத்துக்குச் சமீபமாக வந்த போது திடீரென பஸ்ஸுக்குள் பயங்கரக் குண்டு வெடிப்பு ஒன்று இடம்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் தாக்கியதாக படை தரப்பில் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 16

மருதங்கேணியில் பயணிகள் பஸ்ஸில் நேற்று இடம்பெற்ற சம்பவம்தொடர்பாக படைவட்டாரங்கள் தகவல் தருகையில், பிரஸ்தாப பஸ்ஸின் மீது புலிகளால் மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதல்களினால் பொது மக்கள் இருவர் கொல்லப்பட்டனர் என்றும் —

ஐவர் காயம் அடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

62—7274 இலக்கமுடைய பயணிகள் பஸ்ஸிலேயே இச்சம்பவம் இடம்பெற்றதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

அதேசமயம் மருதங்கேணி சம்பவம் குறித்து பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## செம்மலை, அலம்பில் பகுதிகளில் படையினர் கடும் ஷெல் வீச்சு!

கொழும்பு, மார்ச் 16

மணலாறுக்கு வடக்கே, முல்லைத்தீவுக்காடுகளிலும் கிழக்குக் கரையோரப் பிரதேசங்களிலும் படையினர் கடந்த வியாழக்கிழமை மேற்கொண்ட 'திரிவிட சரய' இராணுவ நடவடிக்கையின் போது செம்மலை, அலம்பில் பகுதிகளை நோக்கி கடுமையான ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டனஎன்று தெரிவிக்கப்படுகின்றது.

இத்தாக்குதலின் போது ஒருவர் கொல்லப்பட்டார்; பலர் காயமடைந்தனர்.

ஜானகபுர முகாமில் இருந்தே ஷெல்கள் ஏவப்பட்டன.

இந்தத் தாக்குதல்களின் போது அப்பகுதியில் உள்ள

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கிலும் கிழக்கிலும் மோதல் சம்பவங்கள்

கொழும்பு, மார்ச் 16

கிளிநொச்சி, வவுனியா, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் நேற்று முன்தினம் படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் மோதல் சம்பவங்கள் இடம்பெற்றதாக அரசு தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

கிளிநொச்சிக்குத் தெற்கே இடம்பெற்ற மோதலில் படையினர் ரி-56 ரக துப்பாக்கி ஒன்றைக் கைப்பற்றினர் என்றும்—

நான்கு புலிகள் இறந்திருக்கலாம் அல்லது காயமடைந்

(8ஆம் பக்கம் பார்க்க)

## பாஸ்கரலிங்கம் உட்பட மூவரின் குடியுரிமைகளை பறிக்க சிபார்சு

கொழும்பு, மார்ச் 16

நிதி அமைச்சின் முன்னாள் செயலாளர் ஆர். பாஸ்கரலிங்கம், முன்னாள் போக்குவரத்து அமைச்சர் விஜயபால மெண்டிஸ், மின்சக்தி அமைச்சின் முன்னாள் செயலாளர் ஹக்கீம் மொஹமட் ஆகியோரின் குடியுரிமை பறிக்கப்பட வேண்டும் என்று விசேட ஜனாதிபதி ஆணைக்குழு சிபார்சு செய்துள்ளது.

ஐ.தே.க. ஆட்சிக் காலத்தில் அரசாங்க நிறுவனங்களில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல்கள், மோசடிகள் தொடர்பாக விசாரிக்க நியமிக்கப்பட்ட விசேட ஜனாதிபதி ஆணைக் குழுவின்இடைக்காலஅறிக்கை அண்மையில் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

அதிலேயே மேற்கண்ட சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் விஜயபால மெண்டிஸ் அனுராதபுரத்தில் தனக்குச் சொந்தமான 76 ஏக்கர் காணிக்குப் பதிலாக தங்கொட்டுவவில்

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென். பற்றிக்ஸ் கல்லூரி

நாளை **17-03-1997** பரிபாலகர் தினத்தையும் பாடசாலைத் தினத்தையும் கொண்டாடும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களை கல்லூரிப் பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் உளமார வாழ்த்துகின்றனர்.

குறிப்புகள்:-

★ அன்று காலை 7-30 மணிக்கு நடைபெறும் திருப்பலியிலும் தொடரும் நிகழ்வுகளிலும் பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் துணைவியர் சகிதம் கலந்து கொள்ளுமாறு அதிபரால் அழைக்கப்பட்டுள்ளனர். சங்க உறுப்பினர் ஒன்றுகூடல் அன்று மாலை 4-30 மணிக்கு சங்கப் பணிமனையில் இடம்பெறும்.

★ **20-04-1997** இல் ஆண்டுப் பொதுக்கூட்டம் நடைபெறவிருப்பதால் அங்கத்துவத்தைப் புதுப்பிக்காதோரும் அங்கத்தவராகச் சேராதோரும் பணிமனையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

**- பி. பெனடிக்ற் -**
**செயலாளர்**
**பழைய மாணவர்சங்கம்.**

59, சென் பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.


**விளம்பர அன்பளிப்பு**



## லாவண்யா

**பல் மூக்குக் கண்ணாடி அகம்**
**டாக்டர் றெஜி சொலமன்**

மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
யாழ். வீதி, நெல்லியடி.

(சி/316)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**தோற்றம்:** 15 — 02 — 1927
**மறைவு:** 26 — 03 — 1996

## அமரர் முருகேசு சின்னத்தம்பி

**திதி: 16 - 03 - 1997**

அன்பின் உருவமாய் பண்பின் சிகரமாய்
எங்களை எல்லாம் பாசமாய் வளர்த்து
உயர் நிலையைக் காட்டிய உத்தமரை
நினைவு கூருகின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**மனைவி, மக்கள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

கலுவாக்கட்டை,
கொல்லங்கலட்டி.

(9390)

உ
விராட் விஸ்வப்பிரம்மனே நம:

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**தோற்றம்:** 14 — 03 — 1965
**மறைவு:** 16 — 03 — 1995

## செல்வி கந்தன்ஆசாரி கமலா

எம் அனைவரையும் நினையாப் பிரகாரமாய்
விட்டுப் பிரிந்த எங்கள் அன்புத் தங்கையே!
அன்புக்கோர் அணையாத விளக்காய்
உதித்த ஆருயிர்ச் செல்வமே!
எங்கள் நெஞ்சம் வாடுகின்றோம்
உன் ஆத்மா சாந்தியடைய
பத்திரகாளி அம்மனை வேண்டுகின்றோம்.

எந்நாளும்
அன்னாரின் பிரிவால் துயருறும்;
**சகோதர, சகோதரிகள்**
மற்றும் **உற்றார், உறவினர்.**

**க. அருணாசலம்**
ஐயனார் கோயில் ஒழுங்கை,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

[9396]

## சனசமூக நிலைய கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 16

குரும்பசிட்டி வளர்மதி சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு உரும்பிராயில் இயங்கும் வசாவிளான் மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

(ஐ-4)

## கோப்பாய் பிரதேச அ. அட்டை

யாழ்ப்பாணம், மார்ச் 16

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இருபாலை தெற்கு, இருபாலை கிழக்கு, கோப்பாய் தெற்கு, கோப்பாய் மத்தி, உரும்பிராய் தெற்கு, உரும்பிராய் மேற்கு, கல்வியங்காடு ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் உள்ளவர்களுக்கான விசேஷ அடையாள அட்டைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் வட்டக் குளத்தடி, கட்டப்பிராயில் வைத்து வழங்கப்படும்.

(இ-4)

## தீக்காயங்கள்: இருவர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், மார்ச் 16

நெருப்பில் எரிந்து படுகாயமடைந்த நிலையில், இருவர் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

கோண்டாவில் கிழக்கில் நேற்று முன் தினம் இரவு படுக்கையில் குப்பி விளக்கு தட்டுண்டு தீப்பற்றி எரிந்ததில் பொன்னம்பலம் சுந்தரலிங்கம் (வயது 40) என்பவர் ப்டுகாயமடைந்தார்.

புங்குடுதீவில், நேற்று முன் தினம் இரவு இடம்பெற்ற சம்பவம் ஒன்றில் மற்றும் ஒருவர் தீக்காயங்களுக்கு உள்ளானார்.

(இ-15)

## விளையாட்டுப் போட்டிகள்

திருநெல்வேலி கிழக்கு செங்குந்த இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்லமெய் வல்லுநர் போட்டி நாளை திங்கட்கிழமை முற்பகல் 9 மணிமுதல் அதிபர். ஆ. இராஜகோபால் தலைமையில் நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக கல்விப்பணிப்பாளர் திரு. சு. இரத்தினராசாவும், கௌரவ விருந்தினராக நிர்வாக உத்தியோகத்தர் செ. மெற்றாஸ்மயிலும், சிறப்பு விருந்தினராக லயன் வ. பரமசிவமும் கலந்து கொள்வர்.

(ஐ)

★ ★ ★

கோண்டாவில் சி. சி. த. க. பாடசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று ஞாயிறு பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் . இ. சிவபாதசேகரம் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக வலயம் — 1 கல்விப் பணிப்பாளர் திரு. சு. இரத்தினராசா கலந்து கொள்வார். கௌரவ விருந்தினராக நல்லூர் உதவி அரசாங்க அதிபர் சி·வேல் முருகோன்பிள்ளை கலந்து கொள்வார்.

(ஐ)

★ ★ ★

வலிகாமம் தெற்கு, மார்ச் 16

சுன்னாகம் கோட்டைக்காடு அ. த. க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சாளம்பை முருகன் ஆலய வீதியில் அதிபர் தி. நவரத்தினம் தலைமையில் நடைபெறும். பாடசாலையின் முன்னாள் ஓய்வு பெற்ற அதிபர் ச. அண்ணாமலை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

(ஐ 152)

# தவறுக்கு வருந்துகின்றோம்

நேற்றைய உதயன் (**15 - 03 - 97**) பத்திரிகையில்

"தந்தை செல்வாவின் நூற்றாண்டை,
மனோகரன் அன் வெற்றிவேல் தாபனத்தினர்
நினைவு கூருகின்றனர்" என்னும் தலைப்பில்

வெளிவந்த எமது விளம்பரத்தில் தந்தையின் தோற்றம்: **31 - 03 - 1896** என்று தவறாக வெளியிட்டு விட்டோம். அவரது தோற்றம்: **31 - 03 - 1898** என்பதாகும். மேற்படி தவறுக்கு வருந்துகின்றோம்.

**மனோகரன் அன் வெற்றிவேல்**

(45827)


# Centre For English Language And Computer Education (CELCE)

★ க. பொ. த. உயர் தரத்தில் தகுதி பெற்றவர்களுக்கான கற்கை நெறிகள்.
★ பயின்று தொழில் வாய்ப்புக்களைப் பெறுங்கள்.
★ பயிற்சிகளுக்கூடாக மனிதவள மேம்பாட்டை பரவலாக்குவதே இந்நிறுவனத்தின் இலக்கு.

★ **கற்கை நெறிகள்**

**C I M A - Stage I & Stage II**
**Computing English Language**

★ முதற்கட்டமாக C I M A (Stage I) ஏப்ரல் 97 இல் ஆரம்பமாகின்றது.
★ கற்க விரும்புவோர் தமது சுயவிவரங்களுடன் 25-03-1997 இற்கு முன்பதாக விண்ணப்பிக்கவும்.

- President — **PROF.V, NAVARATNARAJAH**
- Managing Director — **A. PANCHALINGAM**

முகவரி:-
07, Ratnam Lane,
OFF, K. K. S. Road,
Vannarponnai,
Jaffna.

(45828)


# மரண அறிவித்தல்கள்

## கந்தையா சதாசிவம்

கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட வெள்ளைத்தம்பி என்று அழைக்கப்படும் கந்தையா சதாசிவம் (சிவபாலசிங்கம்) கொழும்பில் 11 - 3 - 97 அன்று காலமானார்.

அன்னார் சாந்தவதனாவின் அன்புக் கணவரும், யசிதா, தனேயன், விஜிதா, முகுந்தன், சசிதா, மகிந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ் சென்ற கந்தையா - கமலாச்சியின் அருமைப் புதல்வரும், இராமசாமி - இரத்தினமலர் ஆகியோரின் அன்பு மருமகனும் திருமதி மகேஸ்வரி கனகசபாபதி, திருமதி விமலாதேவி நடராசா, சிவலிங்கம், திருமதி விக்னேஸ்வரி தேவராசன் ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக் கிழமை கொழும்பில் நடைபெறும்.

தகவல்:
**க. கனகவாசன்.**
(மருமகன்)

பொற்பதி வீதி,
கோண்டாவில்.

(9392)

## வித்துவான் பொன். அ. கனகசபை

புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும் யாழ். வைத்தீஸ்வர வித்தியாலய, புங்குடுதீவு மகா வித்தியாலய ஆசிரியருமாகிய வித்துவான் பொன் அ. கனகசபை அவர்கள் 15 - 3 - 97இல் இறைபதம் எய்தினார்.

இவர் பராசக்தியின் அன்புக் கணவரும், காலஞ் சென்ற அம்பலவாணர் — கற்பகம் தம்பதிகளின் மகனும், சதாசிவம், குமாரவேல், (ஓய்வுபெற்ற அதிபர்), பூரணம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், கமலாஜினி, கலைச்செல்வி (கச்சேரி, கிளிநொச்சி), காந்தியழகன் (இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்), சத்தியதேவி (மாவட்ட நீதிமன்றம், ஊர்காவற்றுறை), அருளரசி (யாழ். மாவட்ட விவசாய சமாசம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவதாசபிள்ளை (அஞ்சலகம், சுண்டிக்குளி), பாலசுப்பிரமணியம் (உருத்திரபுரம்), ஜெயராணி, மகாதேவன், குலசேகரம் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான ஏரம்பு, நல்லதம்பி, முத்துக்குமாரு மற்றும் தருமலிங்கம், அம்பலவாணர், சுப்பிரமணியம், அரியமலர் ஆகியோரின் அன்பு மைத்துனரும், தினேஸ்குமார், மதிவதனன், மாலினி, சேயோன், ஜனகன், சங்கீதா, பிரசாத், சிறீசனாத், பங்கஜன், அனுஜன், பிரணவன் ஆகியோரின் அருமைப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 16-3-97 இன்று பிற்பகல் 2 மணியளவில் 48 A, கச்சேரி நல்லூர் வீதியில் இருந்து தகனக் கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்பாகக் கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
**அ. க. காந்தியழகன்** (மகன்)
மு. **சிவதாசபிள்ளை** (மருமகன்)

48 A, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

(45833)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்பேனியாவிலுள்ள வெளிநாட்டு பிரஜைகளை மீட்கும் பணி தீவிரம்!

## அமெரிக்க ஹெலிமீது கிளர்ச்சியாளர்கள் சூடு

ரிரானா, மார்ச் 16

அல்பேனியாவில் உள்நாட்டுக் கலகம் தீவிரமடைந்து வருவதை அடுத்து அங்குள்ள தங்கள் நாட்டு பிரஜைகளை மீட்கும் பணியில் வெளிநாடுகள் பல தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

அல்பேனியாவில் உள்ள சுமார் ஆயிரம் இத்தாலியப் பிரஜைகளை அந்நாடு ஹெலிக் கொப்ரர்கள் மூலம் மீட்டுள்ளது, பிரிட்டன் தனது 131 பிரஜைகளையும் அங்கிருந்து ஏற்கனவே அழைத்துவிட்டது. அங்குள்ள சுமார் 2ஆயிரத்து 200 அமெரிக்கர்களையும் அழைக்கும் பணியில் அமெரிக்காவும் தீவிரமாக இறங்கியுள்ளது.

அங்கு மீட்பு பணியில் ஈடுபட்டிருந்த அமெரிக்காவின் 'கோப்றா' ஹெலிகள் மீது கிளர்ச்சியாளர்கள் துப்பாக்கி வேட்டுக்களை இரண்டு முறை தீர்த்துள்ளதை அடுத்து மீட்பு பணி நடவடிக்கைகளை அமெரிக்கா நிறுத்தியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

அல்பேனியாவில் இருந்து அகதிகளாக வெளியேறிக் கொண்டிருக்கும் அல்பேனிய மக்களை அயல் நாடுகளான கிரேக்கமும், இத்தாலியும் ஏற்று அவர்களுக்குப் புகலிடம் அளிக்க வேண்டும் என்று அகதிகளுக்கான ஐ நா தாபனம் வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

அல்பேனியாவுடனான தனது எல்லைப் பகுதியை யூகோஸ்லாவியா மூடிவிட்டது. அந்த எல்லைப் பகுதியில் இராணுவம் குவிக்கப் பட்டிருக்கிறது.

தலைநகர் ரிரானாவில் வேட்டொலிகள் தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருக்கின்றன என்றும் —

தாங்கள் கைப்பற்றிய துப்பாக்கிகளால் மக்கள் தாறுமாறாகச் சுட்டுக் கொள்வதாகவும் —

தவறுதலாக இடம்பெற்ற வெடி விபத்துக்களில் சுமார் 10 பேர் உயிரிழந்திருப்பதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிளர்ச்சியாளர்கள் கையோங்கி வருகின்ற இவ்வேளையிலும் —

தான் பதவி விலகவோ அல்லது நாட்டைவிட்டுத் தப்பியோடவோ போவதில்லை என்று ஜனாதிபதி சாலி பொரிஷா தெரிவித்திருக்கிறார். (ஐ-10)

### இஸ்ரேலிய மாணவரைக் கொன்ற

# ஜோர்தான் சிப்பாய்க்கு 'வீரன்' எனப் புகழாரம்!

அம்மான், மார்ச் 16

இஸ்ரேல் ஜோர்தான் எல்லையோரம் சுற்றுலா சென்ற இஸ்ரேலிய பள்ளி மாணவிகள் 7 பேரைச் சுட்டுக் கொன்ற ஜோர்தான் நாட்டு சிப்பாயை 'பெரும் வீரன்'' என்று பலஸ்தீன தீவிரவதாக் குழு ஒன்று வர்ணித்துள்ளது.

''அரபு நாடுகளை ஆக்கிரமிப்புச் செய்த முதல் மூன்று யூதர்களின் கல்லறைகளை தரிசித்து அஞ்சலி செலுத்த வைப்பதன் மூலம் மாணவரின் மனங்களில் இத்தகைய ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் சரியானவையே என்ற எண்ணத்தை ஊட்டவே சுற்றுலா நடத்தப்பட்டு வருகிறது. எனவே அது தடுத்து நிறுத்தப்பட வேண்டும்'' — என்றும் அந்த தீவிரவாதக் குழு தெரிவித்துள்ளது.

பள்ளிச் சிறுமிகளைச் சுட்டுக்கொன்ற ஜோர்தான் இராணுவ வீரனின் உண்மையான நோக்கங்கள், மன.நிலைகள் என்ன என்பதை தீர விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி ஜோர்தான் மன்னர் ஹுசெய்ன் உத்தரவிட்டுள்ளார் (ஐ-10)

## சிறுவர் துர் நடத்தை அதிகரிப்பு

பாரிஸ், மார்ச் 16

சிறுவர்களைப் பாலியல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தியதன் பேரில் 200 பேர் பிரான்ஸில் கைது செய்யப்பட்டுள்ளனர். சிறுவர் பாலியல் தொடர்பான சுமார் 4 ஆயிரம் வீடியோ நாடாக்களையும் பிரெஞ்சு பொலீஸார் கைப்பற்றியுள்ளனர்.

பிரான்சின் அனைத்துப் பிராந்தியங்களிலும் சுமார் 600 பொலீஸார் கடந்த புதனன்று மேற்கொண்ட திடீர் நடவடிக்கையின் போது இவர்கள் 200 பேரும் கைது செய்யப்பட்டனர்.

(ஐ)

## கிளின்ரனுக்கு சத்திர சிகிச்சை



நியூயோர்க், மார்ச் 16

அமெரிக்க அதிபர் பில் கிளின்ரனுக்கு காலில் செய்யப்பட்ட சத்திர சிகிச்சை வெற்றிகரமாக முடிந்துள்ளதாக வெள்ளை மாளிகை அதிகாரிகள் தெரிவித்தனர்.

புளோரிடா மாநிலத்துக்குச் சென்றிருந்த சமயம் அதிபர் கிளின்ரன் சறுக்கி விழுந்ததில் அவரது காலில் பலத்த அடியால் முறிவு ஏற்பட்டது.

அறுவைச் சிகிச்சையின் போது அவருக்கு மயக்க மருந்து அளிக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டால் அத்தருணத்தில் அவரது பதவியை தற்காலிகமாக துணை அதிபரிடம் கையளிக்க வேண்டிய ஏற்பாடுகள் அரசமைப்பு ஒழுங்கின் பிரகாரம் மேற் கொள்ளப்பட்டிருந்தது. ஆனால் கிளின்ரனுக்கு இடுப்பின் கீழ் மட்டுமே உணர்வற்ற நிலையை ஏற்படுத்த மருந்து கொடுக்கப்பட்டது.

அடுத்தவாரம் ஹெல்சிங்கியில் இடம்பெறவுள்ள ரஷ்ய அதிபர் பொறிஸ் யெல்ட்சினுடனான உச்சி மாநாட்டில் கலந்து கொள்ள தாம் அங்கு செல்வார் என்று அதிபர் கிளின்ரன் உறுதியாகக் கூறினார்.

(ஐ-10)

# அல்பேனியாவுக்கு அமைதிப்படை; சர்வதேசப் பிரதிநிதிகள் முயற்சி

ரிரானா, மார்ச் 16

அல்பேனியாவில் எழுந்துள்ள நெருக்கடி நிலையைத் தணிக்க அமைதிப்படை ஒன்றைப் பணியில் ஈடுபடுத்துவது குறித்து சர்வதேச மத்தியஸ்தர்கள் ஆலோசனை நடத்தி வருகின்றனர்.

அல்பேனியாவில் புதிய இடைக்கால அரசுடனும், கிளர்ச்சிக்காரர்களது பிரதிநிதிகளுடனும் இது குறித்து பேச்சுக்கள் இடம்பெற்று வருகின்றன.

ஜனாதிபதி சாலி பெரிஷாவின் நிலைப்பாடு என்ன என்பதை அறிவதிலும் மத்தியஸ்தர்கள் ஈடுபட்டுள்ளனர்.

புதிதாக சமரச முயற்சி ஒன்றை ஆரம்பித்துள்ள முன்னாள் ஆஸ்திரிய அதிபர் பிரான்ஸ் றணஸ்கி நெருக்கடி நிலையை தணிப்பதில் வெற்றிபெறுவார் என்று எதிர்பார்சப்படுகிறது.

அல்பேனியாவுக்கு அருகே கடலில் தரித்து நிற்கும் இத்தாலியக்கப்பல் ஒன்றில் தங்கியுள்ள பிரதிநிதிகள் இந்த சமரசப் பேச்சுக்களை நடத்தி வருகின்றனர். (ஐ)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



## திருமதி அன்னபூரணம் கந்தசாமி

தோற்றம்: **18-09-1931** மறைவு: **15-02-1997**

15-02-97 அன்று இறைவனடி சேர்ந்த திருமதி அன்னபூரணம் (பூரணம்) கந்தசாமி அவர்களின் வீட்டுக் கிருத்தியம் 17-03-97 நாளை திங்கட் கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

அத்தருணம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்;
பிள்ளைகள்: **க. கிருஸ்ணசாமி, தங்கராசா, கமலாதேவி, பாலசுப்பிரமணியம்** (ஜேர்மன்),
மருமகன் **சந்தன கோபால்,**
**சகோதரர்கள், உற்றார், உறவினர்கள்.**

லோட்டன் றோட்,
தம்பர் லேன்,
மானிப்பாய்.

(9385)


வெளிவந்துள்ளது!

**நாமும் சுற்றாடலும் ஆண்டு 4 புதிய பாடத்திட்டம்**

புதிய பதிப்பு - 1997

வெளியீடு:

**ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை,**

யாழ்ப்பாணம்.

(45770)


## வைத்தியம்

பல வருடப்பட்ட சகல ரோகங்கள் (தோல் வியாதி), நாட்பட்ட எலும்பு முறிவு - நோ பூரண சுகம் பெற நாடுங்கள்:

**வைத்திய கலாநிதி திருமதி ஜெ. எம். பொன்னுதுரை**
**276, கனகரட்னம் வீதி, நாயன்மார்கட்டு.**

(45723)


# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 01 — 11 — 1926

உதிர்வு: 09 — 03 — 1995

திதி:- 16 - 03 - 1997

அமரர்

## தாமோதரம்பிள்ளை சிவபாதசுந்தரம்

(இளைப்பாறிய கிராமசேவையாளர்)

அன்பினால் ஆட்சி செய்து அனைவரையும் உபசரித்து
பண்பினால் உயர்ந்து நின்ற உத்தமரே வாழியவே!
உள்ளத்தின் வேதனைகள் ஊற்றாய் பொங்கி எழ
கண்ணுக்கு எட்டாமல் காலனடி சென்றனையோ?

நீங்காத நினைவுடன் வாழும்:
மனைவி, மகள், சகோதரி,
மக்கள், பேரப்பிள்ளைகள்.

றோகினி,
கண்டி வீதி, சாவகச்சேரி.

(45815)


யா/வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம்

# நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்கள்

நியமனம் பெற்ற நாள்முதல் தொடர் சேவையாற்றி வெள்ளிவிழாக் கண்டு, இப் பாடசாலையின் அன்னையெனத்திகழ்பவர்

**திருமதி இ. சோமசுந்தரம்** அவர்கள்.

சேவையில் உயர்ந்து நிற்கும் அன்னாரை உளமார வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர், சிற்றூழியர், மாணவர்கள். (45817)

பாடசாலை அபிவிருத்திச்சபையினர், பழையமாணவர் சங்கத்தினர்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஊர்காவற்றுறை
## புனித அந்தோனியார் கல்லூரி பழைய மாணவர் சங்க
# பொதுக்கூட்டம்

காலம்: 22-03-97 சனிக்கிழமை
நேரம்: மு. ப. 10.00 மணி
இடம்: கல்லூரி மண்டபம்

எமது கல்லூரி
**125 வருட நிறைவு விழா**
சம்பந்தமாக இக்கூட்டத்தில் கலந்துரையாடவிருப்பதால் பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(45808) - தலைவர்

---

## அரச ஊழியர் சம்பளம் 18 ஆம் திகதி

நவாலி, மார்ச் 16

அரசாங்க ஊழியர்களின் இம்மாதச் சம்பளம் எதிர்வரும் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வழங்கப்படும்.

இதற்கான அறிவித்தல் திறைசேரியினால் வெளியிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு இச் சம்பளம் குறிப்பிட்டுள்ள திகதிக்கு முன்பதாக வழங்கப்படுவதாகவும் —

இவற்றுடன் இவ்வாண்டு ஜனவரி முதல் அதிகரிக்கப்பட்ட சம்பள நிலுவையையும் வழங்குமாறு சகல திணைக்களங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-100)

---

பத்தாவது ஆண்டு
# நினைவலைகள்



தோற்றம்: 16 — 12 — 1924

மறைவு: 16 — 03 — 1987

## அமரர் வ. க. ஈசுரபாதம்
(கல்வி அதிகாரி, வடமராட்சி கோட்டம்.)

திதி: 23 - 03 - 1997

பாசத்தின் பெருமை சொல்லி
பார் புகழ கல்வியூட்டி,
கற்றவர் மத்தியில் எம்மை
தலை நிமிர்ந்து வாழ வைத்த
தெய்வமே அப்பா!
நாம் வாழும் நேரத்தில் ஓடி
நீங்கள் சென்ற தெங்கே அப்பா?
வருடங்கள் பத்தாகியும்
வற்றாத கண்ணீருடன்,
வாடி நிற்கின்றோம்.

அன்பு மனைவி ஈ. ரஞ்சிதமலரும், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகளும்.

தகவல்:
திருமதி மதுனா சண்முகராஜா
(மகள்)
புலோலி தெற்கு,
புலோலி. (சி-306)

---

## ரூபவாஹினி செய்தியாளர் தாக்கப்பட்டார்

கொழும்பு, மார்ச் 16

மட்டக்களப்பு ஆஸ்பத்திரிக்கு சமீபமாக கடந்த புதன் கிழமை காலை இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் பற்றித் தகவல் சேகரிக்கச் சென்ற ரூபவாஹினிச் செய்தியாளர் தாக்கப்பட்டுள்ளார் என்று அறிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு ஆஸ்பத்திரியைச்சேர்ந்த வைத்தியர் ஒருவரும் அவரது இரு உதவியாளர்களும் இந்த செய்தியாளரைத் தாக்கி அவரிடமிருந்த ஒலிபரப்பு நாடாவைப் பறித்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு ரூபவாஹினி செய்தியாளர் இது சம்பந்தமாக பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

---

# தேவை

அச்சுக்கோர்ப்பாளர், பைண்டிங் பழகிய - பழக விரும்பும் பெண் பிள்ளைகள் தேவை. தொடர்பு:
**திருவள்ளுவர் அச்சகம்**
**இல. 593, பருத்தித்துறைவீதி,**
(யாழ். மாநகரசபை அருகில்)
நல்லூர். (45820)

---

# ஓராண்டு நினைவஞ்சலி



## திருமதி கந்தையா யோகம்மா
(தவமணி)

தோற்றம்: 1942—03—13

மறைவு: 1996—03—27

திதி: 1997-03-16

எண்ணிலா மனிதர்க்கெல்லாம் இயற்கையின்
கொடையும் தாயே,
மனையதனிற் புகும்பொழுது வருவதுங்கள்
முகக்குறிப்பே,
தண்ணீரில் அழுதிடும் மீன்போல இன்று எம்மோடு
நாம் அழும் காட்சிதனைக் காண்பதற்கோ,
தந்தைதனைப் பிரிந்த வேளையிலும் தளராத தாயாகி
மருமக்கள் இருவருக்கும் பிரியமுள்ள மாமியுமாகி
ஆசைப் பேரனுக்கு ஓர் அன்புமிகு அம்மம்மாவுமாய்
பாசப்பிணைப்புடனே இருந்த நீங்கள்
பற்றறுத்து வெகுவிரைவில் சென்றதும் ஏன்தானோ?
தேறாது தேறாது எம் உள்ளம்,
ஆறாது ஆறாது நம் கவலை.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

குடும்பத்தினர்

சுதுமலை தெற்கு,
எச்சாட்டி வீதி,
மானிப்பாய். (9388)

---

# ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 22 — 06 — 1936

மறைவு: 27 — 03 — 1996

## அமரர் பெ. கனகரத்தினம்
(ஓய்வு பெற்ற சுங்கத்திணைக்கள தட்டச்சாளர்-கொழும்பு — யாழ்ப்பாணம்)

எனது வாழ்வின் தெய்வமே!
தாங்கள் எங்கள் வீட்டின் ஒளிவிளக்காக வந்தீர்கள். எங்கள் கிராமத்தவர் பலர் இங்கு இல்லாமல் இருந்த வேளை, நாம் பல துன்பங்களை அனுபவித்து வாழ்ந்து வந்தோம். அவ்வேளை எமக்கு ஆறுதல் கூறி எம்மை வாழ வைத்தீர்! எங்கள் யாவரது விசுவத்தனை முருகப் பெருமான் கோயில் மணியோசை அன்று கேட்காத குறை தங்களை வாட்டிய குறையாக இருந்ததை நாம் அறிவோம் ஐயா! நாம் யாது செய்வோம்! 'ஒரு பொல்லாப்பும் இல்லை' என்று கூறிவைத்தார் யோகர் சுவாமிகள், என்று கூறுவீர்கள். தாங்கள் 27-3-96 புதன்கிழமை காலை பொன்னாலை சென்று கண்ணபிரான் பாதம் தொழுது வந்தீர்கள். வரும்போது எமக்கு நிவாரணப் பொருள்களும் கொண்டு வந்தீர்கள். தங்களைப் பின் தொடர்ந்த மாயவர் தங்கள் உயிரை தம்முடன் சேர்த்து விட்டார். நாம் இன்று தனிமையாய் விட்டோம். யாது செய்வோம்; தவிக்கின்றோம். தங்கள் உயிர் சொந்த மண்ணில் பிரிந்து ஓராண்டு சென்று விட்டது. ஐயா உமது நினைவலைகள் என்றும் எமது நினைவைவிட்டு அகலவே மாட்டாது.

தங்களது ஆத்மசாந்தி வேண்டி விசுவத்தனை வேலவர் பாதங்களைத் தினமும் தொழுகின்றோம்.

மனைவி திருமதி க. பராசக்தி
மைத்துனர் திரு. ஸ்ரீ சரவணபவன்

பண்ணாகம்,
சுழிபுரம். (சி/313)

---


# BASF

## யாழ். விவசாயிகளுக்கு ஒரு நற்செய்தி!

ஜேர்மனியின் BASF நிறுவனத்தின் விவசாய இரசாயனங்களான

குமுலுஸ் டி எவ்
பேர்Fவெக்தியோன்
தயோடான்
பிFன்பொஸ்
பொலிராம்

மற்றும் புழுத் தாக்கத்தைக் கட்டுப்படுத்த
டெஸிஸ்

தற்பொழுது கொழும்பிலிருந்து புதிதாக தருவிக்கப்பட்டு குடாநாட்டின் சகல விவசாய இரசாயன விற்பனை நிலையங்களிலும் விற்பனையாகின்றன.

விநியோகஸ்தர்:

# FARMERS STORES
(கமக்காரர் மாளிகை)

சுன்னாகம் கிளை: திருநெல்வேலி

## BASF - FINLAY (PVT.) LTD.
186, VAUXHALL STREET, COLOMBO -

பீடை கொல்லிகள் அபாயகரமானவை, அவதானமாகப் பாவியுங்கள். (சி-265)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச லயன்ஸ் கழகம்

## மாவட்டம் 306B - இலங்கை வலயம் - VII

## வலயக் கருத்தரங்கு -- சிறப்பிதழ்

சர்வதேச லயன்ஸ் கழகங்களின் மாவட்டம் 306 Bயின் பிராந்தியம் 07 இல் உள்ள லயன்ஸ் கழகங்களினதும் அவற்றின் கீழியங்கும் லியோ கழகங்களினதும் ஒன்று கூடல் நிகழ்ச்சியும் கருத்தரங்கும் இன்று 16 - 03 - 97 சிறப்பாக யாழ். பல்கலைக்கழகக் கைலாசபதி கலையரங்கில் நடைபெறுகின்றன. இவ்வைபவத்திற்கு மாவட்டப்பிரதி ஆளுநர் லயன் K. தில்லைநாதன் அவர்கள் பிரதம அதிதியாகக் கொழும்பிலிருந்து வருகை தந்துள்ளார்.

சர்வதேச லயன்ஸ் கழகங்கள் தற்போது 183 க்கும் மேற்பட்ட நாடுகளில், புவியியல் ரீதியாக 714 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு 43,000க்கும் மேற்பட்ட கழகங்களும் அவற்றில் 15,00,000 (15 இலட்சம்) வரை உறுப்பினர்களைக் கொண்டு செயற்பட்டு வருகின்றது. இச் சர்வதேச லயன்ஸ் கழகங்கள் முதன் முதலில் மெல்வின் ஜோன்ஸ் என்பவரால் அமெரிக்காவிலுள்ள சிக்காக்கோ நகரில் 07 - 06 - 1917 இல் ஆரம்பிக்கப்பட்டது. இக்கழகங்களின் ஒரே நோக்கம் ''நாங்கள் சேவை செய்வோம்'' என்பதேயாகும். இவ்வமைப்பை ஆரம்பிக்கும் போது, அப்போதைய நிலையில் பிரத்தியேகமான சேவையை நோக்கமாகக் கொண்ட அமைப்புக்கள் இருக்கவில்லை. இக்குறையை நீக்கவே இக்கழகங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இன்றைய உலகில், சேவையை நோக்கமாகக் கொண்ட ஒரு பெரும் அமைப்பாகச் சர்வதேச லயன்ஸ் கழகங்கள் முனைப்பாகச் செயற்பட்டு வருகின்றன. இக்கழகங்களின் தலைமையகம் அமெரிக்காவிலுள்ள இலினோயிஸ் என்ற மாநிலத்தில் அமைந்துள்ளது. இத் தலைமையகத்தில் இப்போது 500க்கும் மேற்பட்டவர்கள் தொழில்புரிந்து வருகின்றார்கள் என்றால் அதன் ஸ்திரத்தன்மை, விஸ்தீரணமான அமைப்பு முறை என்பவற்றைப் புரிந்துகொள்ளலாம்.

### இலங்கையில் லயன்ஸ்

சர்வதேச லயன்ஸ் கழகத்தினால் இலங்கையை 306 பெருமாவட்டமாகவும் (Multiple District) அதன் கீழ் 306 A, 306B, 306C ஆகிய மூன்று மாவட்டங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளன. மாவட்டம் 306B யின் கீழ் கொழும்பு மாநகரத்தின் ஒரு பகுதியும் மற்றும் கம்பகா, குருநாகல், கேகாலை, புத்தளம், அனுராதபுரம், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய நிர்வாக மாவட்டங்களும் அடங்கியுள்ளன. மாவட்டம் 306B யில் தற்போது 72 லயன்ஸ் கழகங்கள் சேவையாற்றி வருகின்றன. இக்கழகங்கள் 7 பிராந்தியங்களாக பிரிக்கப்பட்டு உள்ளன. வடபகுதியிலுள்ள லயன்ஸ் கழகங்கள் பிராந்தியம் 7 இன் கீழ் செயற்படுகின்றன.

இந்த ஏழு பிராந்தியங்களும் திறம்படச் செயலாற்றக்கூடிய வகையில் 14 வலயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் ஒரு பிராந்தியத் தலைவரும் வலயங்களுக்குப் பொறுப்பாக வலயத் தலைவரும் மாவட்ட ஆளுநரால் ஒவ்வொரு நடப்பாண்டும் நியமிக்கப்பட்டு இவர்களின் கண்காணிப்பிலும் வழிநடத்தலிலும் பிராந்தியத்திலுள்ள லயன்ஸ் கழகங்கள் செயற்படுகின்றன. இக்கழகங்கள் செயற்படும் காலப்பகுதியாக ஆடிமாதம் 1 ஆம் திகதியில் இருந்து ஆனிமாதம் 30 ஆம் திகதியாகக் கொள்ளப்படுகின்றது.

மாவட்டம் 306 Bயின் ஆளுநராக லயன் சித்திரால் அமரதுங்க அவர்களும் பிரதி ஆளுநராக லயன் K. தில்லைநாதன் அவர்களும் தற்போதைய செயற்பாட்டு ஆண்டில் பதவி வகிக்கின்றார்கள்.

எமது வடபிராந்தியத்தில் 10 கழகங்கள் சேவையாற்றி வருகின்றன. வடபிராந்தியம் - 07 இன் தலைவராக லயன் எஸ். எஸ். தங்கராஜா அவர்களும் வலயம் ஒன்றினதும், வலயம் இரண்டினதும் தலைவராக முறையே லயன் வி. தில்லைநாதன் அவர்களும் லயன் வைத்திய கலாநிதி எஸ். எஸ். அருளானந்தம் அவர்களும் செயலாற்றி வருகின்றனர். இவ்விரு வலயத் தலைவர்களின் கீழ் மேற்படி 10 லயன் கழகங்கள் அக்கழகங்களின் தலைவர்களின் வழிநடத்தலில் செயற்பட்டு வருகின்றன.

இப்பிராந்தியத்தின் இணைப்பாளராக லயன் கே, வி. முத்துக்குமாரசாமி அவர்கள் செயற்பட்டு வருகின்றார்.

### லியோ கழகங்கள்

மேலும் இப்பிராந்திய லயன்ஸ் கழகங்களின் ஆதரவின் கீழ் தற்போது 11 லியோ கழகங்கள் இக்கழகங்களுக்கு உறுதுணையாக செயற்பட்டு வருகின்றன. இந்தப் பதினொரு லியோ கழகங்களில் ஆறு லியோ கழகங்கள் பிரபல்யமான கல்லூரிகளில் இயங்கி வருகின்றன. இன்னும் ஆறு லியோ கழகங்கள் சென்ற ஆண்டு பிராந்தியத்திலேற்பட்ட இடம் பெயர்வினாலும் மற்றும் அனர்த்தங்களினாலும் பாதிக்கப்பட்டுச் செயலிழந்துள்ளன. லியோக் கழகங்கள் யாழ். நகருக்கு வெளியேயுள்ள முக்கியமான பாடசாலைகளில் இயங்கி வந்தன.

சென்ற ஆண்டு வலிகாமம் பகுதிகளில் இருந்து மக்கள் இடம் பெயர வேண்டிய நிலை ஏற்பட்டதனாலும் யுத்தம் காரணமாகவும் இப்பிரிவிலுள்ள 06 லயன்ஸ் கழகங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுச் செயலற்ற நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தன. அத்துடன் கழக உறுப்பினர்களில் சிலர் வன்னிப் பிரதேசத்திற்கும், கொழும்பு மற்றும் வெளிநாடுகளுக்கும் சென்றுள்ளதால் இக்கழகங்கள் செயற்பாட்டினைத் துரிதப்படுத்த முடியாதிருந்தது. இக்கழகங்கள் திரும்பவும் செயற்பாட்டினை தொடர்வதற்கு பிராந்தியத் தலைவர் முழுமூச்சாகச் செயற்பட்டு வெற்றிபுமடைந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. பிராந்தியத் தலைவரும் வலயங்களின் தலைவர்களும் கழகத் தலைவர்களும் இக்கழகங்கள் திரும்பவும் மிகச் சிறந்த முறையில் சேவை செய்யக் கூடிய முறைக்கு குறுகிய காலத்திற்குள் செயற்பட்டுள்ளனர் வடமராட்சி, சாவகச்சேரி கழகங்கள் உட்பட எல்லாக் கழகங்களின் தலைவர்களும் இழந்த உறுப்பினர்களை ஈடுசெய்யும் வகையில் உத்வேகத்துடன் செயற்படக்கூடிய புதிய உறுப்பினர்களை கழகங்களில் இணைத்துசெயற்பட்டு வருகின்றனர்.

இக்கழகங்களின் நிர்வாகிகள் தங்கள் முக்கிய சேவையாக 'கண்ணொளிக்கு முதலிடம்'' கொடுத்து பெரும் சேவை செய்துவருகின்றனர். இவ்வாண்டு கண்பரிசோதனை/சிகிச்சை நிலையங்களை நடத்தி கண்பார்வை குறைந்தவர்களுக்கு மூக்குக் கண்ணாடி வழங்கும் சேவையையும் செய்து வருகின்றனர். இச் செயற்றிட்டத்தின் கீழ் இவ்வாண்டு மாவட்ட ஆளுநர் லயன் சித்திரால் அமரதுங்க அவர்களினதும் பிரதி மாவட்ட ஆளுநர் லயன். K. தில்லைநாதன் அவர்களினதும் மற்றும் இம்மாவட்டத்திலுள்ள சில சகோதரக் கழகங்களின் உதவியுடனும் ஒரு தொகை கண்ணாடிச் சில்லுகளைப் (Intra - Ocular L ens) பெற்று இப்பிராந்தியத்தில் கண் பூப்படலத்தினால் பாதிப்படைந்த வசதி குறைந்தொர்கட்கு உதவி வருகின்றனர். பொதுச் சுகாதார சேவை பயின்றே சலரோக பரிசோதனை, இரத்த அமுக்கப் பரிசோதனை போன்ற சேவைகளையும் கிராமங்களில் செயற்படுத்தி வருகின்றனர். ★



லயன் சித்ரால் அமரதுங்கா
ஆளுநர்



லயன். கே. தில்லைநாதன்
உப. ஆளுநர்



லயன். எஸ். எஸ் தங்கராசா
பிராந்திய தலைவர்

### பிராந்தியத் தலைவர்
லயன் எஸ். எஸ். தங்கராஜா

### வலயம் - 1 இன் தலைவர்
லயன் வி. தில்லைநாதன்

1. யாழ்ப்பாணக் கழகம் — தலைவர்
லயன் கலாநிதி கா. குகபாலன்
2. வடமராட்சிக் கழகம் — தலைவர்
லயன் கே. தணிகாசலம்
3. வட்டுக்கோட்டைக் கழகம் — தலைவர்
லயன் டாக்டர் போட்டர்
4. சுன்னாகக் கழகம் — தலைவர்
லயன் எஸ். சிவராஜா
5. மன்னார்க் கழகம் — தலைவர்
லயல். வி. விசுவலிங்கம்

### வலயம் - 02 இன் தலைவர்
லயன் வைத்திய கலாநிதி
எஸ். எஸ். அருளானந்தம்.

1. நல்லூர்க் கழகம் — தலைவர்
லயன் ஏ. தங்கேஸ்வரன்
2, கோப்பாய்க் கழகம் — தலைவர்
லயன் வைத்தியகலாநிதி வி. தியாகராஜா,
3. மானிப்பாய்க் கழகம் — தலைவர்
லயன் சி. கேசவராஜன்.

### மாவட்ட வருடாந்த மாநாடு

306 B மாவட்டத்தின் பத்தொன்பதாவது வருடாந்த மாவட்ட மாநாடு இவ்வருடம் மே மாதம் 3 ஆம், 4 ஆம் திகதிகளில் நடைபெறும். இந்த மாநாட்டில் கலந்து கொள்ள விரும்புவோர் மேலதிக விவரங்களுக்கு பிராந்தியத் தலைவருடனோ அல்லது வலயத் தலைவருடனோ தொடர்பு கொள்ளவும்.

### மலர் ஆக்கம்

லயன். கலாநிதி கா. குகபாலன்
தலைவர்
லயன்ஸ்கழகம் யாழ்ப்பாணம்.

லயன். சட்டத்தரணி பா. தவபாலன்
3 ஆம் உபதலைவர்
லயன்ஸ்கழகம் நல்லூர்.

வாழ்த்துவோர்:
RAVE MOTORS
ரவி மோட்டோர்ஸ்
245, Stanley Road, JAFFNA.
(விளம்பர இல. சி/314)

றடோ றேடிங்ஸ்
இல. 220, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
நியாயமானவிலையில் மோட்டசைக்கில்கள் உடன் விற்பனைக்குண்டு. துரித கெதியில் போட்டஸ்ரற் பிரதிகள் அடித்துக் கொடுக்கப்படும். முக்கியமாக மாணவர்களின் ரியூட்டரிபிரதிகள் மலிவு முறையில் போட்டஸ்ரற் செய்து கொடுக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

இறைச்சிக்கோழி (புறோயிலர்) மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 154, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். குறிப்பு: காலை 8.30 மணிவரை இலவசமாக சுத்தம் செய்து கொடுக்கப்படும். (9383)

97/98 சோதிட ஞானி சண் மாஸ்டரின் 12 இராசிக்கான புத்தாண்டுப் பலன்கள் வெளியாகியுள்ளன. பத்து ரூபா ஜோஸ்யர் 308 A, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். (9384)

யாழ். பல்கலைக்கழக சுற்றாடலில் சகல வசதிகளுமுடைய வீடும், காணியும் மற்றும் Belling Auto-Timer, எலெக்ரிக் குக்கர், மேசை/Pedestal விசிறிகள், ஊஷா குளிர் சாதனப்பெட்டி, சோனி ரெலிவிஷன், ஜெனரேற்றர் ஆகியன விற்பனைக்குண்டு. தொடர்பு: இல, 91/5, இந்துமகளிர் ஒழுங்கை, கந்தர்மடம். (45735)

இறைச்சிக்கோழி சுத்தம் செய்து விற்கப்படும். V K.M. பாம், இல. 12, கனகசபை லேன், குமாரசாமி ஸ்ரோர்ஸ் யாழ்ப்பாணம். (யாழ். இந்துக் கல்லூரி பின்பக்கம்) (45807)

எம்மிடம் '8 X 12' புதிய சுருக்கு கேற், ட்ராப்ஸ்மன் செற், உடுப்பு அலுமாரி, வீட்டு சோக்கேஸ், T. V. ஸ்ரான்ட், மெத்தையுடன் கட்டில் விற்பனைக்குண்டு. இல. 43, அரசடி வீதி, தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம். (45818)

ஒருமாதம் வளர்ச்சியடைந்த வெள்ளை நிறபேட்டுக் குஞ்சு உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- ப. ஜெபறெட்ணம் (பபி) 77, வீனஸ் பில்டிங் சென். பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம். (45813)

ஆங்கில தட்டெழுத்து இயந்திரம் போட்டபிள் ஒலிம்பியா புதிய நிலையிலுள்ளது. தொடர்பு: ஈசன் பலசரக்குக்கடை, பாற்பண்ணை அருகாமை, திருநெல்வேலி. (458'5)

சண்டிலிப்பாய் வீதி, பண்டத்தரிப்பில் இரண்டு பரப்புக் காணி கல்வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: செல்வி எஸ். துரைசிங்கம் சண்டிலிப்பாய் வீதி, பண்டத்தரிப்பு. (சி/312)

## கல்வி

கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை 31 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். மற்றும், பாலர் வகுப்பிலிருந்து A/L வரை சகல பாடங்களும் நிறைவேற்றப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு, ஒழுங்கை, சுண்டுக்குளி. (45802)

## வீடு தேவை

சிறிய வீடு, அல்லது அனெக்ஸ் அரசாங்க உத்தியோகத்தருக்கு தேவை. தொடர்பு:- சு. சண்முகராஜா (மதிப்பீட்டாளர்) 387, கோயில் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். (45825)

## ஜோதிடம்

எத்தகையதிராத பிரச்சினைகளும் தீர ஆலோசனை வழங்கப்படும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். சாதகத்துடன் வரவும். பொய்யா மொழி ஜோதிடம், ஸ்ரீவீரமாகாளிஅம்மன் கோயிலடி 140, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (45782)

## இறைச்சிக் கோழி

இறைச்சிக் கோழிகள் (Broiler) விற்பனைக்குண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: வ. அல்போன்ஸ்சஸ், இல: 68, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம். (45806)

இறைச்சிக் கோழிகள் (புறோயிலர், லைக்கோன் சேவல், பேடு) விற்பனைக்குண்டு. தொடர்பு: 141, காயில் வீதி, யாழ்ப்பாணம். (45799)

நியாய விலையில் இறைச்சிக் கோழிகள் (புறொயிலர்) விற்கப்படும். இல. 54/2, சந்தனமாதா கோயில் முன் ஒழுங்கை, கொழும்புத்துறை வீதி, பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம். (45823)

## கணிதம் 97

கணித பாடத்தின் பெரும் பிரிவுகளான அட்சர கணிதம், கேத்திர கணிதம், எண் கணிதம், புதிய கணிதம் ஆகியவற்றின் சகல அலகுகளை 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. (45801)

## மனஓசை

உளநலம் சம்பந்தப்பட்டது

இருமாதம் — ஒரு இதழ்

- வெற்றுக் குருவிக்கூட்டு நோய்க்குறித் தொகுதி
- இலக்கொன்று வேண்டும்
- இயல்பு நிலைப் பிறழ்வு
- ஒரு முழுமையின் இரு கூறுகள்
- மனம் என்றால் என்ன?
- பன்முக உளப்பாங்கு

தை — மாசி இதழ் வெளிவந்துவிட்டது!

தொடர்பு: 'சாந்திகம்',
15, கச்சேரி நல்லூர் வீதி,
சுண்டுக்குளி.

(சி/291)


உ

# விவாக சோபன அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் தாதுவருடம் பங்குனி மாதம் 4 ஆம் நாள் திங்கட்கிழமை
(17 — 3 — 97) இடபலக்ன சுபமுகூர்த்தத்தில் பகல்
11-30 மணி முதல் 12-45 மணிக்கிடையில்
உள்ள தேவேந்திர சுபவேளையில்

எமது
சிரேஷ்ட செல்வப்புதல்வன்
**சிவதாசன்**
(ஜேர்மனி)
அவர்கட்கும்



எமது
சிரேஷ்ட செல்வப்புதல்வி
**விஜிதா**
(உப தபால் அதிபர்,
நீர்வேலி)
அவர்கட்கும்

மணமகள் இல்லத்தில் திருமணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால்
அத்தருணம் தாங்கள் தங்கள் சுற்றம்சூழ வருகை தந்து மணமக்களை
ஆசீர்வதித்தேகுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

(இருவீட்டார் அழைப்பு)

த. பாலசிங்கம் குடும்பத்தினர்
(ஓவசியர்)
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

சி. சுந்தரலிங்கம் குடும்பத்தினர்
(இராசவீதி)
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(45743)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

United Nations
Development Programme
Sustainable human development

**Undp**

## TERMS OF REFERENCE

# LOGISTIC AND ADMINISTRATION SUPPORT OFFICER - JAFFNA

## 1. BACKGROUND

The UN Agencies operating in Jaffna have agreed to establish a common **UN Logistic Support Centre in Jaffna** to be operated by UNDP in collaboration with the other UN Agencies. The Centre will also aim at servicing other international donors. This Centre will be providing the following services:

a) To provide logistic support facilities to UN Agencies and international donors active in Jaffna District. The support facilities will consist of accommodation, office, transport and communication facilities provided in a safe and secure environment.
b) To provide on site liaison and project support to UNDP's development partners in Jaffna.

## 2. STAFFING

Once established, it is intended that the Support Centre be headed by an internationally recruited Centre Manager directly assisted by a Logistic and Administrative Support Officer who will be locally recruited in Jaffna. Further support will be provided by a secretary and driver(s) commensurate with the number of vehicles made available to the Support Centre.

## 3. LOGISTIC AND ADMINISTRATION SUPPORT OFFICER-JAFFNA

The Support Officer will report to the internationally recruited Centre Manager. Until the arrival of the Centre Manager, the Support Officer will report to the UNDP Deputy Resident Representative (Operations) through the UNDP Administrative Officer in Colombo.

As soon as practically possible, the Support Officer will provide logistic and administrative support to visiting UN Officials and UN-supported activities, in line with the objectives of the Support Centre. Guidelines and further identification of tasks and responsibilities for the Support Officer will be worked out by the UNDP Office in Colombo in collaboration with the Centre Manager.

## 4. TIMING, DURATION

The Logistic and Administrative Support Officer will be recruited and commence his/her duties as soon as possible.

The Support Officer will be recruited for an initial period of 3 months, to be extended for a further 9 months depending on satisfactory performance. Further extension may be possible, depending on the needs of the project activities.

## 5. QUALIFICATIONS

The successful candidate must have the following qualifications:

a) A technical background and / or experience enabling him / her to properly identify building renovation needs and properly supervise and keep on track the renovation work.
b) Be well established in Jaffna and have or be able to establish good relations with the Government Agent's Office and other authorities.
c) The successful candidate will possess good interpersonal skills enabling him to effectively interact with local contractors, local authorities in Jaffna, other UN Agency Staff anb international consultants on mission to Jaffna.
d) Complete command of English and Tamil languages. A knowledge of Sinhala will be an advantage.
e) Administrative skills, including basic knowledge of accountancy and administrative procedures.
f) Be highly efficient, flexible, and able to actively find solutions to practical and other problems. Be willing to work under pressure if necessary under difficult circumstances.
g) Practical experience in both technical and administrative areas for a period of no less than 10 years.

## 6. APPLICATION

Interested candidates with the necessary qualifications should forward their applications with complete bio data addressed to

**The Resident Representative UNDP**
**C/o UNHCR**
**Temple Road, Jaffna.**

The applications should reach the above address on or before **24 March 1997.**

(C/309)

# உதயன்

## யாது காரணம்?

தமிழர்கள் இன்றைய அவலங்களையும், துன்பங்களையும், கஷ்டங்களையும் அனுபவிக்கக் காரணம் என்ன? நிம்மதியாகச் சுதந்திரமாக வாழமுடியாமல் அனலிடைப்பட்ட புழுப் போலத் துடித்துக்கொண்டு இருப்பது எதனால்? இந்தத் துன்ப துயரங்கள் எப்போது எமது இனத்தைவிட்டு நீங்கப் போகின்றன?

தமிழ்ப் பொதுமக்கள் ஒவ்வொருவரினதும் நெஞ்சங்களில் — இல்லை மனங்களில் — இன்று இவ்வாறு எத்தனையோ கேள்விகள் எழுகின்றன.

உலகில் பிறந்த ஏனைய மனித சீவன்களைப்போல மனிதனுக்கே உரிய உரிமைகளுடன், தானுண்டு தன்பாடு உண்டு என வாழ வேண்டும் என்று தமிழர்கள் விரும்பியது, விரும்புவது குற்றமா? உரிமை வேண்டும் என்று கேட்டதற்குக் கிடைத்த பரிசில்களா இவை?

அந்நியர் ஆட்சிக் காலத்தில் தமிழர்கள் தாம் உயர் நிலையில் வைக்கப்பட்டார்கள் என்பதற்காக, அதனை அனுபவித்து, மேலதிகாரம் செய்யத் துணிந்த வினையின் விளைச்சலா இது?

பிராரத்துவ வினையின் ஒட்டு மொத்த வடிவம்தான் இன்றைய அனர்த்தங்கள், அவலங்களின் பிறப்பிடமா?

தமிழர்கள் தங்களுக்குள் தங்களையே அடிமைப்படுத்தி, கொடுமைப்படுத்தி புறக்கணித்துக் கொட்டமடித்ததன் பாவம் தான் இன்றைய நீங்கா இன்னல்களுக்கு மூல வேரா?

சமய நெறிகளையும், மனுதர்மங்களையும், ஒழுக்கத்தின் விழுப்பத்தையும் மறந்து தலைதெறிக்க வாழ்ந்து வந்ததன் பிரதிபலன்களோ இவை?

எங்களுக்கும் மேலாக ஒருவன் —இறைவன்—இருக்கின்றான் என்ற ஆன்மீக நாட்டம் தேய்ந்து போனதால் இப்படி ஒரு நிலையா? பாரம்பரிய சமயநெறிகளையும், தர்மசீலங்களையும், நன்னெறிகளையும் ஒதுக்கிவிட்டு புதிய விதமாக வாழத் தொடங்கியதன் அறுவடைகளா இவை?

இவ்வாறாக ஒவ்வொருவரும் ஒவ்வொரு கோணங்களில் பலப்பல கேள்விகளை எழுப்பி விடைகாணமுடியாத நிலையில் தவிக்கிறார்கள்.

தன்னைத்தானே திருத்திக் கொள்ள முயல்பவன் தான் முழு மனிதன். தமிழர்களோ மனித வாழ்க்கையின் எல்லா அங்கங்களிலும், துறைகளிலும் திருந்த வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

இன்றைய இன்னல் மிகுந்த வேளையிலும் ஆடம்பர வாழ்க்கையைத் துறப்பதற்குப் பலருக்கு மனம் திருந்துவதாக இல்லை. அதர்மங்களை அகற்றி வாழ வேண்டும் என்று செயலில் விரும்புவோர் இல்லை.

பணத்தின் மீதுள்ள பேராசையை விரட்ட முன்னிற்போர் மிகச் சிலரே. அடுத்தவன் துன்பத்தில் இன்பம் காணுதல், காட்டிக் கொடுத்தல், சுயதலம், அறநெறிகளை மறந்து போனமை, சமூக நீதிகளை சுருட்டி வீசியமை, சகோதரனுக்கும் உதவிடாத கஞ்சத்தனம், அடுத்தவனை வஞ்சிக்கும் மனப்போக்கு இப்படி எத்தனையோ அதர்மங்களைக் களைய வேண்டும்.

அதர்மங்கள் மேலோங்க அவற்றின் பாரத்தால் சமூகம் கோணிவிடும். கோணிய சமூகம் அவலப்படுவது தவிர்க்க முடியாதது.

# பூநகரியிலிருந்து வந்தவர்கள் வீடு செல்வதற்கு அனுமதி

குருநகர், மார்ச் 16

கடந்த 10ஆம் திகதி பூநகரியில் இருந்து படகு மூலம் குருநகர் வந்து சேர்ந்த 53 குடும்பங்களைச் சேர்ந்த 203 பேரும் நேற்றுமுன் தினம் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

கடந்த திங்கட்கிழமை குருநகர், நாவாந்துறையைச் சேர்ந்த 53 குடும்பங்களைச் சேர்ந்த 203 பேர் பூநகரி பாலாவியில் இருந்து படகுகளில் வெள்ளைக் கொடியுடன் குருநகர் இறங்குதுறையை வந்தடைந்ததும்— இவர்கள் இராணுவத்தினரின் கண்காணிப்பில் வைக்கப்பட்டிருந்ததும் — தெரிந்ததே.

குருநகரைச் சேர்ந்த 51 குடும்பங்களைச் சேர்ந்த 191 பேர் கடந்த புதன்கிழமை காலை 8 மணி தொடக்கம் 12 மணி வரை தமது இருப்பிடங்களுக்குச் சென்று திரும்ப அனுமதிக்கப்பட்டார்கள். நாவாந்துறையைச் சேர்ந்தவர்களுக்கு இத்தகைய அனுமதி வழங்கப்படவில்லை.

இவர்களைக் கண்காணிப்பில் வைத்திருந்த இராணுவத்தினர் நேற்று முன்தினம் மாலை 6.00 மணியளவில் அனைவரையும் தாம் கொண்டுவந்த பொருள்களுடன் தத்தமது இல்லங்களுக்குச் செல்ல அனுமதித்தார்கள்.

இவர்களை விடுவிக்கும் போது குருநகர் கிராம சேவையாளர்கள் மூவரும், நாவாந்துறை கிராம சேவையாளரும் உடன் இருந்தார்கள். எதுவித நிபந்தனையுமின்றி இவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

இவர்கள் இராணுவக் கண்காணிப்பில் தங்கியிருந்த நாள்களில் இவர்களுக்கான உணவு மற்றும் அவசிய தேவைகளை வழங்குவதில் குருநகர் கடற்றொழிலாளர் சங்கங்கள், குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி அமைப்பு, றெக்கிளமேசன் சனசமூக நிலையம் ஆகியவையும் —

கச்சேரி புனர்வாழ்வுப் பகுதியினர், குருநகர் கிராம சேவையாளர் ஆகியோரும் முக்கிய பங்கு வகித்தனர். (இ-51)

## தேசிய சேமிப்பு வங்கி வெள்ளிவிழா

வடமராட்சி, மார்ச் 16

பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கியின் 25 ஆவது ஆண்டு வெள்ளிவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை வங்கியின் மேல் மாடி மண்டபத்தில் நடைபெறும்.

இன்றைய தினம் பாடசாலை வங்கிகளும் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும். (ஐ-173)

## ஒய்வூதியம்

வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தினூடாக ஓய்வூதியம் பெறுபவர்களுக்கான மார்ச்மாத ஓய்வூதிய வவுச்சர்கள் அனுப்பப்பட்டுள்ளன.

சங்கானை கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு வங்கிக்கும்—

ஏனையவர்களுக்கு அவர்களின் முகவரிக்கும் வவுச்சர்கள் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார். (இ-12)

சுகாதார நடவடிக்கைக்காக

# வடக்கு-கிழக்குக்கு 12கோடி 20லட்சம் ரூபா

கொழும்பு, மார்ச் 16

வடக்கு—கிழக்கு மாகாணத்தில் இவ்வாண்டு மேற்கொள்ளப்படவுள்ள சுகாதார நடவடிக்கைகளுக்கு 12 கோடி 20 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக வடக்கு—கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

எட்டு மாவட்டங்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ள நிதிவிவரம் வருமாறு:-

★ யாழ்ப்பாணம்— 2 கோடி 72 லட்சம் ரூபா

★ கிளிநொச்சி— 70லட்சம் ரூபா

★ முல்லைத்தீவு— 39 லட்சம்ரூபா

★ மன்னார்— 90 லட்சம் ரூபா

★ வவுனியா— ஒரு கோடி 60 லட்சம் ரூபா

★ திருகோணமலை— ஒரு கோடி 77 லட்சம் ரூபா

★ மட்டக்களப்பு— ஒரு கோடி 32 லட்சம் ரூபா

★ அம்பாறை— இரண்டு கோடி 68 லட்சம் ரூபா. (இ-150-3)

# கல்வியைத் தொடர விரும்பும் 10 மாணவருக்கு உதவிப் பணம்

## இராமகிருஷ்ண மிஷன் வழங்கும்

ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பில் பயிலும் வறுமை நிலையில் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த 10 மாணவர்களுக்கு அவர்களது கல்வியைத் தொடர உதவுவதற்காக உதவிப்பணம் வழங்க கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி ஆத்மகணானந்தாஜி முன்வந்துள்ளார்.

இந்த உதவித் தொகையைப் பெறவிரும்பும் வறிய நிலையில் உள்ள மாணவர்கள் தங்கள்ஜி சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் உட்பட சுய விவரங்களை பாடசாலை அதிபர்கள் மூலம் உறுதிப்படுத்தியும்—

குடும்ப நிலை விவரங்களை கிராமசேவையாளர் மூலம் உறுதிப்படுத்தியும் விண்ணப்பங்களை திருநெல்வேலியில் உள்ள இராமகிருஷ்ணாலயத்துக்கு எதிர்வரும் ஏப்ரல் 15 ஆம் திகதிக்கு முன்பதாக அனுப்பி வைக்குமாறு திருநெல்வேலி இராமகிருஷ்ணாலய இயக்குநர் தெரிவித்தார்.

# விளையாட்டு மைதானங்களில் மிதிவெடிகள் பல மீட்பு!

குடாநாட்டில் உள்ள பாடசாலைகளில் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் ஆரம்பமாகியுள்ள இவ்வேளையில் விளையாட்டு மைதானங்களில் மிதி வெடிகள் குறித்து மாணவர்கள் எச்சரிக்கப்பட்டுள்ளனர்

சில பாடசாலைகளின் மைதானங்களில் இருந்து மிதி வெடிகள் பல மீட்கப்பட்டுள்ளன. யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இருந்து அடுத்தடுத்துப் பல மிதிவெடிகள் மீட்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சில பாடசாலைகள் தங்கள் மைதானங்களில் மிதிவெடிகளைப் பரிசோதித்த பின்னரே மாணவர்களை விளையாட்டு மைதானத்துக்குள் அனுமதித்துள்ளன.

விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் காலத்தில் மாணவர்கள் மைதானங்களில் அதிகளவில் கூடும் வேளை மிதிவெடிகள் மூலம் அனர்த்தங்கள் நேரிடலாம். எனவே மாணவர்களை உரிய முன்னெச்சரிக்கையுடன் நடமாட அறிவுறுத்த வேண்டும் என்று பெற்றார் ஒருவர் தெரிவித்தார். (ஐ-4)

## சமய சந்நிதிகளில்

கொழும்புத்துறை வளன்புரம் புனித சூசையப்பர் ஆலய வருடாந்த பெருவிழா கடந்த 13 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

விழாவில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை பெருநாள் திருப்பலியை அடுத்து காலை 7 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். பின்னர் புனிதரின் திருச்சொரூபப் பவனியுடன் விழா முடிவுறும். (ஐ-30)

★ ★ ★

இணுவில் ஸ்ரீ சிவகாமி அம்பாள் கோயில் வருடாந்த உற்சவ மஞ்சத் திருவிழா நாளை நடைபெறும்.(ஐ-30)

★ ★ ★

தனங்கிளப்பு ஸ்ரீ மகாமாரி அம்பாள்ஆலய கொடிகட்டல் திருவிழா நேற்று மாலை3-30 மணிக்கு ஆரம்பமாகியது. தொடர்ந்து எட்டு தினங்கள் விசேட அபிஷேகம், பூசை ஆராதனை வழிபாடுகளுடன் விழா நடைபெறும்.

எதிர் வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை காலை பொங்கலும்,நண்பகல் அம்பாள் வீதி வலம் வந்து குளிர்த்தியும் இடம்பெறும். (ஐ-30)

★ ★ ★

அல்வாய் வடக்கு வியாபாரிமூலை அருள்மிகு பத்திர காளி சமேத ஸ்ரீ ஆதி சிவ வீர பத்திர சுவாமி கோயிலில் வருடாந்த உற்சவத்தையொட்டி அகில இலங்கை இந்து மறுமலர்ச்சி ஆதீனகுரு பீடத்தைச் சேர்ந்த சித்தாந்த சாகரம் அழகு ஜெகதீஸ்வர தேசிகர் 'அர்த்தமுள்ள இந்து மதம்' என்ற தலைப்பில் சமய சொற்பொழிவு நிகழ்த்தி வருகிறார்.

கடந்த 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் நடைபெற்றுவரும் இச் சொற்பொழிவு இம் மாதம் 23 ஆம் திகதி வரை நடைபெறும்.

# வாழ்வில் இருந்து சாவுக்கு வரும் அழைப்பே வாழ்வுக்குச் செல்லும் மாபெரும் யாத்திரை

இன்று தவக் காலத்தின் ஐந்தாம் ஞாயிறு ஆகும். திருமுழுக்கு வழியாக விசுவாச அருளைப் பெறுகின்றவர்கள் சாவில் இருந்து வாழ்விற்குச் செல்லும் மாபெரும் யாத்திரையைத் தொடர்கின்றார்கள்; என்றுமே சாக மாட்டார்கள் என்பது இன்றைய கருப் பொருளாகும்.

இறைவாக்கினர் எசேக்கியேல் காலத்தில் இந்த சம்பவம் நடைபெற்றது. ஆண்டவர் எசேக்கியேலை உயர்ந்த எலும்புகளின் பள்ளத்தாக்கிற்கு அழைத்துச் சென்றார். அங்கே எலும்புகள் நிறையக் கிடந்தன. அவை மிகவும் உலர்ந்து யோய்க் கிடந்தன. இந்த எலும்புகளுக்கு இறைவாக்குரை என்றார் ஆண்டவர். அவர் இறைவாக்குரைத்த போது எலும்புகள் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து கொண்டன. நரம்புகள் ஏற்பட்டு சதை,தோல் என்பன தோன்றின. பின் அவை உயிர் பெற்றன (எசேக் 37:12-14).

இயேசு ஒரு தடவை பெத்தானியாவிற்கு வந்தார். மரியா என்னும் பெண் அவர் காலில் விழுந்து, ''ஆண்டவரே நீர் இங்கு இருந்திருந்தால் என் சகோதரன் இறந்திருக்க மாட்டான்'' என்று அழுதாள். மார்த்தா, மரியா ஆகியோரின் சகோதரதன் இலாசர் இறந்து நான்கு நாள்கள் ஆகி இருந்தன. தன்னுடைய நண்பனின் மரணத்தைக் கேட்டு இயேசு கண்ணீர் விட்டு அழுதார். உள்ளம் குமுறியவராய் கல்லறைக்கு அருகில் சென்று குகையை மூடி இருந்த கல்லை அகற்றிவிடும்படி சொன்னார். இறந்து போனவரின் சகோதரி மார்த்தா நான்கு நாளாயிற்றே நாற்றம் அடிக்குமே என்றாள். ''நீ நம்பினால் கடவுளின் மாட்சியைக் காண்பாய் என நான் உன்னிடம் கூறவில்லையா?'' என்றபின் இலாசரே வெளியே வா என்று கூப்பிட்டார். இறந்தவர் உயிரோடு வெளியே வந்தார் (அரு.11:1-45).

நாம் இருளில் இருந்து ஒளிக்கும், பொய்மையில் இருந்து மெய்மைக்கும், சாவில் இருந்து வாழ்விற்கும் அழைக்கப்படுகிறோம். இந்த அழைப்பு சாவில் இருந்து வாழ்விற்குச் செல்லும் மாபெரும் யாத்திரையாகும்.

உயிர் மனித வாழ்வில் முக்கியமான ஒன்று, உயிர் இன்றி வாழ்வு இருக்க முடியாது; சாவும் இருக்க முடியாது. உயிர் வாழ்வன தான் வாழ முடியும்; அவை தான் சாகவும் முடியும். கிறிஸ்தவக் கருத்துப்படி சாவு வாழ்வின் முடிவு அல்ல; நிறைவும் அல்ல. இறப்பு உயிர்ப்பிலே நிறைவு பெற வேண்டும். இந்த உயிர்ப்பு, ''உயிர்ப்பும் உயிரும் நானே'' என்னும் இயேசுவின் உயிர்ப்பில் பங்கு கொள்வதாக இருக்க வேண்டும்.

எமது அன்றாட 'சாவுகளில்' இருந்து வாழ்விற்கும், 'இருளில்' இருந்து ஒளிக்கும், 'பொய்மையில்' இருந்து மெய்மைக்கும் எம்மை அழைத்துச் செல்ல இறைவனை வேண்டுவோம்.

அருட்திரு.
ரூபன் மரியாம்பிள்ளை

## தவக்காலச் சிந்தனை

5 ஆவது ஞாயிறு

## நாளை

**பங்குனி 4**

**திங்கட்கிழமை**

திதி: நவமி
முன்இரவு 11-50 வரை.
நட்சத்திரம்: திருவாதிரை
முன் இரவு 9.02 வரை.
சுபநேரம்: 12.20 – 1.50
ராகுகாலம்: 7.50 - 9.20
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**MERLIN**

**VACANCY – SECURITY GUARD**
(CASUAL)

Male, Age 25 to 50 years, English speaking, Physically fit, Previous Experience, Preference given to Sinhala Speakers.
Applications to:-
T. Kailanathan, Administrative Officer,
MERLIN. Jaffna. C/o. 51, St. Annes Lane,
Chundukuly.
Closing date:- **23 – 03 – 1997**
Previous applicants need not apply.
(45821)

## புலமைப் பரிசில் '97

ஆண்டு 5 மாணவக் குழந்தைகளின் நலன் கருதி எமது பயிற்சிப் பரீட்சைகள் 09 - 03 - 97 எம்மால் வெளியிடப்பட்ட கல்வி நிறுவனங்களுடன், இக்கல்வி நிறுவனங்களிலும் நடத்தப்படுகின்றன.

KEEN — திருநெல்வேலி
YARL HALL — யாழ்ப்பாணம்
TALENT — கரவெட்டி
நெல்லண்டை க. நி. — தும்பளை
தர்மா — உடுவில்
குருபரன் — புத்தூர்

**BOND INSTITUTES**
யாழ்ப்பாணம்.
(45831)

## CD.யிலிருந்துவீடியோ திரைப்படம்

(Video Disc) முதன் முதலில்
யாழ்ப்பாணத்தில் அறிமுகம்!
பழைய புதிய திரைப்படங்கள் CD. யிலிருந்து நேரடியாகப் பதிவு செய்து தரப்படும்.

**சுப்பஸோ**
**வீடியோ ஓடியோ சென்ரர்**
**(ரவி ஒளிகானம்)**
198/5, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
100 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(சி/319)

## பண்ணிசை ஆசிரியர்கள் தேவை

மானிப்பாய் கோவில்பற்று இந்துசமய விருத்திச் சங்கத்தின் சார்பாக நடைபெற்றுவரும் — ஊர்ச்சங்கங்களான — மானிப்பாய், சுதுமலை, நவாலி, சண்டிலிப்பாய், ஆனைக்கோட்டைச் சங்கங்களில் நடைபெற்று வந்த பண்ணிசை வகுப்புக்களை நடத்துவதற்கு — பண்ணிசைத் தராதரம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். விண்ணப்ப முடிவு திகதி **22-03-1997**.
ஏனைய விவரங்களை அறிவதற்கான முகவரி:

செல்வி இ. சுப்பையாபிள்ளை,
செல்லமுத்து வீதி,
மானிப்பாய்.
(9395)

## மாதிரிப் பரீட்சைகள்

I ஆம் தவணைக்கான–பரீட்சைகள்

- **ஆண்டு 3, 4, 5, 6, 7, 8, 9, 10, O/L**
  **எல்லாப் பாடங்களும்**
  22, 23 - 03 - 97 சனி, ஞாயிறுகளில்
- **G. C. E. A/L**
  கணித - உயிரியல் - கலை - வர்த்தகம்
  எல்லாப் பாடங்களும்

பழைய பாடத்திட்டம் புதிய பாடத்திட்டம்
இரண்டிலும் – இரு வேறுமாதிரிப் பரீட்சைகள்

**April** - முதலாவது பரீட்சை
**May** - இரண்டாவது பரீட்சை
**June** - இறுதிப் பரீட்சை

இப்பரீட்சைகளுக்கு எமது நிறுவனத்தில் தோற்ற வசதி இல்லாதவர்கள் தபால் மூலம் தோற்றலாம்.
மேலதிக விபரங்களுக்கு:
பதிவாளர் – பரீட்சைப் பகுதி
**BOND INSTITUTES**
தபால் பெட்டி: **140** - யாழ்ப்பாணம்.
(45832)

## சான்றிதழ் வழங்கும் வைபவம்

யாழ்ப்பாணம், மார்ச் 16

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் கடந்த இரு மாதகாலமாக இடம்பெற்று வந்த ''தொடர்பாடலுக்கான ஆங்கிலம்'' எனும் கற்கை நெறியின் தொகுதி 10, தொகுதி 11 இல் பங்கு பற்றியவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம், இன்று ஞாயிறு பிற்பகல் 2.30 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் இடம்பெறும்.

புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் இரா. சிவசந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ள மேற்படி வைபவத்தில் பிரதம விருந்தினராக பதில் கலைப்பீடாதிபதி பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர் கலந்து கொண்டு சான்றிதழ்களை வழங்குவார். (இ)

## மாணவத் தாதியர்

யாழ்ப்பாணம், மார்ச் 16

யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாணவத்தாதியர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு போதனா வைத்தியசாலைப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றி, நேர்முகப் பரீட்சைக்குத் தகுதியுடையவர்களுடைய பெயர்ப் பட்டியல் ஆஸ்பத்திரி ஊழியர் நுழைவாயிலில் போடப்பட்டுள்ளது. (அ-15)

## புலிகள்..

(முதலாம் பக்கத் தொடர்)

தலைமையகம் நேற்றுத் தகவல் தெரிவிக்கையில் பிரஸ்தாப பயணிகள் பஸ் மீது புலிகள் கண்ணி வெடித் தாக்குதல் நடத்தியதாகத் தெரிவித்துள்ளது.

காயமடைந்தவர்களில் 10 பேர் பலாலி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர் என்றும் அவர்களில் இருவரே இறந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-5)

## வாக்களிப்பு ..

(முதலாம் பக்கத் தொடர்

பாடுகள் கிடைத்துள்ளதாக தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.

தேர்தல் நடக்கும் தினத்துக்கு 48 மணி நேரத்துக்கு முன்பாக முப்படைகளின் உதவியுடன் சுவரொட்டிகள், 'கட்அவுட்'டுக்கள் ஆகியவற்றை அகற்றுமாறு பொலீஸ் மா அதிபர் பிராந்தியப் பொலீஸ் அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் தேர்தலுக்கு முதல் நாளன்றே ஆயுதம் தாங்கிய பொலீஸாரையும், கலகம் அடக்கும் பொலீஸரரையும் சேவையில் ஈடுபடுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. (அ-150-3)

## செம்மலை,...

(முதலாம் பக்கத் தொடர்)

அன்னை வேளாங்கண்ணி ஆலயமும் சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

அலம்பில் கரையோரப் பகுதி நோக்கி கடற்படையினர் மேற்கொண்ட பீரங்கித்தாக்குதலிலும், 'கிபிர்' விமானங்கள் மேற்கொண்ட தாக்குதலிலும் கரையோரப் பகுதியில் வாழ்ந்த மீனவர்களின் உடைமைகள் சேதமடைந்தன.

இந்தத் தாக்குதல்களை அடுத்து அப்பகுதியில் இருந்து நூற்றுக்கணக்கானவர்கள் குமுழமுனை, தண்ணீரூற்று, முள்ளியவளை, உடுப்புக்குளம் பகுதிகளுக்கு இடம்பெயர்ந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-3-150)

## மட்டக்களப்புச் சிறை:
# உண்ணாவிரதத்தை கைதிகள் கைவிட்டனர்

கொழும்பு, மார்ச் 16

மட்டக்களப்புச் சிறைச்சாலையில் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்த 3 கைதிகளும் தமது உண்ணாவிரதத்தைக் கைவிட்டனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் எம். சிவசிதம்பரம் சட்டமா அதிபருடன் நடத்திய பேச்சின் விவரம் உண்ணாவிரதிகளுக்கு அறிவிக்கப்பட்டதும், உண்ணாவிரதம் கைவிடப்பட்டது.

உண்ணாவிரதம் மேற்கொண்டவர்களில் உதயராஜ் என்பவரை விடுதலை செய்யவும் —

ஏனைய இருவர் மீதும் வழக்குத் தாக்கல் செய்யவும் — சட்டமா அதிபர் இணக்கம் தெரிவித்துள்ளார். (இ-3-150)

# அரியாலையைச் சேர்ந்தமாணவி வவுனியாவில் விபத்தில் மரணம்

கொழும்பு, மார்ச் 16

வவுனியா—யாழ். வீதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தில் அரியாலையைச் சேர்ந்த மாணவி ஒருவர் மரணமானார்.

செல்வரத்தினம் கஜேந்தினி (வயது 15) என்பவரே மரணமானவர் ஆவார்.

சைக்கிளில் சென்று கொண்டிருந்த இம்மாணவியை கண்டிவீதிப் பக்கமாக வந்த லொறி ஒன்று மோதியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவரது அடையாள அட்டையில் விநாயகர் கோயில் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம் என்ற முகவரி இருந்தது] என்றும்—

வவுனியா இரண்டாம் குறுக்குத் தெருவில் இவர் வசித்துவந்ததாகவும் வதிவிடப் பொலீஸ் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது என்றும்— அறியவந்தது. (இ-5)

## பாஸ்கரலிங்கம்...

(முதலாம் பக்கத் தொடர்)

கால்நடை அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான செழிப்பான காணியை சட்டவிரோதமாக மாற்றினார் எனவும் —

வரையறுக்கப்பட்ட அசோக் லேலன்ட் நிறுவனத்திடமிருந்து 1,500 பஸ் அடிச் சட்டங்களையும் முக்கிய உதிரிப் பாகங்களையும் கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தத்தை அமைச்சரவையின் அனுமதியின்றி ஆர். பாஸ்கரலிங்கம் மேற்கொண்டார் எனவும் —

எனவே இந்த இருவரினதும் குற்றங்களும் ஒப்புவிக்கப்பட்டுள்ளதால் அவர்களது குடியுரிமை பறிக்கப்பட வேண்டும் எனவும் ஆணைக்குழு சிபார்சு செய்துள்ளது.

நைலோன் வலை உற்பத்தி நிறுவனத்தின் பெறுமதி 120 கோடி டொலர்கள் என அரசாங்க விலை மதிப்பீட்டாளர் தீர்மானித்திருக்கையில் அந்நிறுவனத்தை 22 கோடி 80 லட்சம் அமெரிக்க டொலர்களுக்கு விற்றது தொடர்பாக முன்னாள் மின்சக்தி அமைச்சின் செயலாளர் ஹக்கீம் மொஹமட் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கும் ஆணைக்குழு அவரின் குடியுரிமையும் பறிக்கப்படவேண்டும் என சிபார்சு செய்துள்ளது.

முன்னாள் மின்சக்தி அமைச்சர் சந்திரா பண்டார மீதும் இதே குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு குற்றம் நிரூபிக்கப்பட்டபோதிலும் அவர் மரணமடைந்ததால் தண்டனை எதுவும் சிபார்சு செய்யப்படவில்லை.

நைலோன் வலை உற்பத்தி நிறுவன விற்பனை தொடர்பாக திறைசேரியின் முன்னாள் செயலர் கே. சண்முகலிங்கம் மற்றும் வெளிநாட்டு மூலவள திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் திருமதி சந்திரா அமரசேகரா ஆகியோர் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டுள்ளன என ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இருப்பினும் இவர்கள் இருவரும் மேல் அதிகாரிகளின் அழுத்தங்கள் காரணமாக செயற்பட்டதால் இவர்கள் மீது தண்டனை எதுவும் சிபார்சு செய்யப்படவில்லை.

இந்த விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவராக உயர் நீதிமன்ற நீதி அரசர் பிரியந்த ஆர். பேரேரா செயற்படுகிறார். (இ-10)

## மருதங்கேணி..

(முதலாம் பக்கத் தொடர்)

பெற்றதாகவும் —

பஸ் கண்ணாடிகள் நொருங்கிக் கொட்டுண்ட நிலையில் பஸ் நிறுத்தப்பட்டதாகவும் - பயணம் செய்த வேளை காயமடைந்தவர்களில் ஒரு பெண்மணி உதயனுக்குத் தெரிவித்தார், ஏனைய காயமடைந்தவர்களும் இவ்வாறே தெரிவித்தனர்.

படையினரின் பாதுகாப்புடன் நடத்தப்படும் பஸ் சேவை இது ஆகும்.

இச்சம்பவத்தில் இறந்த மூவரில் இருவா மருதங்கேணியைச் சேர்ந்த ஆறுமுகம் பத்மாவதி(வயது30), உடுத்துறையைச் சேர்ந்த கந்தையா (வயது65) என்று தெரிவிக்கப்பட்டது.

### காயமடைந்த 11 பேர்

சம்பவத்தில் இறந்த பத்மாவதியின் தாயாரான ஆறுமுகம் சிவக்கொழுந்து (வயது 62), தாளையடியைச்சேர்ந்த இராயப்பு மலத்தியாஸ் (வபது68), அவரது பேரன் இராசதுரை விஜயதாஸ் (வயது11), பஸ்சாரதியான பளையைச் சேர்ந்த இராமலிங்கம் தர்மகுலசிங்கம் (வயது42), நடத்துநரான சுண்டுக்குளியைச் சேர்ந்த சிவக்கொழுந்து விஸ்வலிங்கம் (வயது49), மருதங்கேணியைச் சேர்ந்தவர்களான சிவக்கொழுந்து இரத்தினம் (வயது56), அவரது பேரப்பிள்ளை கனகசபாபதி நிறோசா (வயது3) மற்றும் சுப்பிரமணியம் நித்தியானந்தம் (வயது46), தாளையடியைச் சேர்ந்தவர்களான அன்ரனி சில்வா மேரி ஏஞ்சலா (வயது33), மருதநாயகம் சுபோஜினி (வயது16), அருட்சகோதரி ஹென்றியல் (வயது57) ஆகியோரேகாயமடைந்தவர்களாவர்.

காயமடைந்தவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இரண்டு பொதுமக்களது சடலங்களும் பளை ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (இ-15-117)

## வடக்கிலும் கிழக்கிலும்..

(முதலாம் பக்கத் தொடர்)

திருக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா மாவட்டம் மருக்காரப்பளையில் இடம்பெற்ற மோதலில் ஒரு சிப்பாயும் —

மட்டக்களப்பு மாவட்டம் வாழைச்சேனையில் இடம்பெற்ற மோதலில் ஒரு பொலீஸாரும் கொல்லப்பட்டுள்ளனர். (இ-5)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16-03-1997இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org